## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 76/2016 | Date :17.08.2022 | PW1 |
| --- | --- | --- |
| Name: சிவராஜ் | S/o. கருமாலி | |
| Evidence Recorded Time: 12.36 P.M. to 12.50 P.M. | | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

13.01.2016-ம் தேதி ஏற்பட்ட விபத்தில் எனது அப்பாவிற்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 22.02.2017-ல் என் தந்தை இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தந்தை இறந்த பின்பு என் அப்பாவின் உடலை பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இயற்கையான முறையில் இறந்நததால்தான் சடலக்கூராய்வு செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறந்தபின்னிட்டு விபத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு எங்களின் பணம் சம்மந்தப்பட்ட இழப்பீட்டிற்காக இழப்பீடு கோரியுள்ளோம் என்றால் சரிதான். பணம் சம்மந்தமான இழப்பீடு என்பது எனது அப்பாவிற்கு நான் செய்த மருத்துவ செலவு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மருத்துவ பில்களில் மொத்த தொகை ரூ.3,79,895/- என்றால் சரியல்ல. மொத்த மருத்துவ பில்களின் தொகை ரூ.6,77,800/- ஆகும். நான் தாக்கல் செய்த மருத்துவபில்கள் அனைத்தும் இரட்டிப்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அனைத்து அசல் பில்களையும் தாக்கல் செய்துள்ளேன். மருத்துவ பில் எண்.5228 என்ற பில்றிக்கு உண்டா தொகையை இரண்டு முறை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல 12.05.2017 அந்த தேதியில் ரூ.50000/-ற்கு பில் தொகை குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதற்கான பில்லை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கான அனைத்து பில்களையும் தாக்கல் செய்துள்ளேன். மொத்த தொகை ரூ.3,79,895/- மற்றும் உள் உபகரன அட்வான்ஸ் தொகை ரூ.8000/- வாக்கர்அட்வான்ஸ் தொகை ரூ.750/- ஆகியவை நான் பெற தகுதியற்றவர் என்றால் சரியல்ல. தொடர் சிகிச்சைக்காக ரூ.6,77,800/- செலவு செய்துள்ளேன் என்றும் அதற்கான பில்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு இரண்டு காயகங்கள் ஏற்பட்டுது என்றாலும், அதில் ஒன்று தலைப்பகுதியிலும், கால் பகுதியிலும் ஏற்பட்டது என்றால் சரிதான். தலைப்பகுதியில் சாதாரண காயமும், கால்

பகுதியில் கொடுங்காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான். உண்மையான பில்களுக்குண்டான தொகையைத்தான் நான் நஷ்டஈடாக கோரியுள்ளேன் என்றால் சரிதான், அதற்குண்டான வட்டியையும் சேர்த்து நஷ்டஈடாக கேட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த மருத்துவ பில்கள் அதிகப்படியான நஷ்டஈடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் இரட்டிப்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பில் எண். 16069 ற்குண்டான ரூ.1,17,150/- தொகையான இரண்டுமுறை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒருமுறை தான் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நான் கேட்டிருக்கும் இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் இன்று வரை நிலம் உள்ளது.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.